ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கண்ணார் கடல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கண்ணார் கடல் ॥

திருநாங்கூர்த் திருவெள்ளக்குளம்

‡கண்ணார் கடல் போல்⋆ திருமேனி கரியாய்⋆
    நண்ணார் முனை⋆ வென்றி கொள்வார் மன்னு நாங்கூர்⋆
திண்ணார் மதிள் சூழ்⋆ திருவெள்ளக் குளத்துள்
    அண்ணா⋆ அடியேன் இடரைக் களையாயே (1)

கொந்தார் துளவ⋆ மலர் கொண்டணிவானே⋆
    நந்தாத பெரும் புகழ்⋆ வேதியர் நாங்கூர்⋆
செந் தாமரை நீர்த்⋆ திருவெள்ளக் குளத்துள்
    எந்தாய்⋆ அடியேன் இடரைக் களையாயே (2)

குன்றால் குளிர் மாரி⋆ தடுத்துகந்தானே⋆
    நன்றாய பெரும் புகழ்⋆ வேதியர் நாங்கூர்⋆
சென்றார் வணங்கும்⋆ திருவெள்ளக் குளத்துள்
    நின்றாய்⋆ நெடியாய்!⋆ அடியேன் இடர் நீக்கே (3)

கான் ஆர் கரிக் கொம்பது⋆ ஒசித்த களிறே!⋆
    நானாவகை⋆ நல்லவர் மன்னிய நாங்கூர்⋆
தேனார் பொழில் சூழ்⋆ திருவெள்ளக் குளத்துள்
    ஆனாய்⋆ அடியேனுக்கு⋆ அருள் புரியாயே (4)

‡வேடார்⋆ திருவேங்கடம் மேய விளக்கே⋆
    நாடார் புகழ்⋆ வேதியர் மன்னிய நாங்கூர்⋆
சேடார் பொழில் சூழ்⋆ திருவெள்ளக் குளத்தாய்⋆
    பாடா வருவேன்⋆ வினை ஆயின பாற்றே (5)

கல்லால் கடலை⋆ அணை கட்டி உகந்தாய்⋆
    நல்லார் பலர்⋆ வேதியர் மன்னிய நாங்கூர்⋆
செல்வா⋆ திருவெள்ளக் குளத்துறைவானே⋆
    எல்லா இடரும்⋆ கெடுமாறருளாயே (6)

www.prapatti.com

கோலால் நிரை மேய்த்த⋆ எங்கோவலர் கோவே⋆
நால் ஆகிய⋆ வேதியர் மன்னிய நாங்கூர்⋆
சேலார் வயல் சூழ்⋆ திருவெள்ளக் குளத்துள்
மாலே⋆ என வல் வினை⋆ தீர்த்தருளாயே (7)

வராகம் அதாகி⋆ இம்மண்ணை இடந்தாய்⋆
நாராயணனே!⋆ நல்ல வேதியர் நாங்கூர்⋆
சீரார் பொழில் சூழ்⋆ திருவெள்ளக் குளத்துள்
ஆராவமுதே⋆ அடியேற்கருளாயே (8)

பூவார் திரு மாமகள்⋆ புல்லிய மார்பா!⋆
நாவார் புகழ்⋆ வேதியர் மன்னிய நாங்கூர்⋆
தேவா!⋆ திருவெள்ளக் குளத்துறைவானே⋆
ஆவா! அடியான்⋆ இவன் என்றருளாயே (9)

‡நல்லன்புடை⋆ வேதியர் மன்னிய நாங்கூர்⋆
செல்வன்⋆ திருவெள்ளக் குளத்துறைவானை⋆
கல்லின் மலி தோள்⋆ கலியன் சொன்ன மாலை⋆
வல்லர் என வல்லவர்⋆ வானவர் தாமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com